


நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 101 06.10.2025 MONDAY PURATTASI : 20 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 101 06.10.2025 திங்கள்கிழமை புரட்டாசி : 20 விலை : ரூ.5/-

3 '18 எம்எல்ஏக்களை அரசியல் அநாதையாக்கியவர் டிடிவி தினகரன்' ஆர்.பி.உதயகுமார் குற்றச்சாட்டு

4 "விஜய்யை கைது செய்தால் அது தவறான முன்னுதாரணம் ஆகிவிடும்" - டிடிவி தினகரன்

2 டார்ஜிலிங்கில் கனமழையால் நிலச்சரிவு: 9 பேர் பலி மீட்புப் பணியில் என்டிஆர்எஃப்

# "ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக தமிழகம் போராடும்" ஆளுநருக்கு முதல்வர் ஸ்டாலின் பதிலடி

சென்னை: அக்.6-

"தமிழ்நாடு யாருடன் போராடும்? என ஆளுநர் கேட்டுள்ளார். இந்தி மொழியை ஏற்றால்தான், கல்வி நிதியைக் கொடுப்போம் என இருக்கும் ஆணவத் திமிருக்கு எதிராகப் போராடும்" என ஆளுநர் ரவிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி கொடுத்துள்ளார்.

வள்ளலாரின் பிறந்தநாள் விழாவில் பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 'தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்' என அடிக்கடி கூறிவரும் நிலையில், தமிழ்நாடு யாருடன் போராடும்? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், ""தமிழ்நாடு யாருடன் போராடும்?" என ஆளுநர் கேட்டுள்ளார்ஞ் இந்தி மொழியை ஏற்றுக்கொண்டால்தான், கல்வி நிதியைக் கொடுப்போம் என இருக்கும் ஆணவத் திமிருக்கு எதிராகப் போராடும். அறிவியல் மனப்பான்மையை விதைக்கும் கல்வி நிலையங்களுக்குள் சென்று மூடநம்பிக்கைகளையும் புரட்டுக் கதைகளையும் சொல்லி, இளம் தலைமுறையை நூறாண்டு பின்னோக்கி இழுக்கும் சதிக்கு எதிராகப் போராடும்!

உச்சி மண்டை வரை மதவெறியை ஏற்றிக்கொண்டு, எதற்கெடுத்தாலும் மதத்தைப் பிடித்துக் கொண்டு நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தந்திரக் கும்பல்கள் தலையெடுக்காமல் போராடும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை, மக்களின் விருப்பத்திற்கு மாறாக நெருக்கும் ஜனநாயக





விரோதிகளுக்கு எதிராகப் போராடும்.

ஆளுநரின் அதிகார அத்துமீறல்களுக்கு எதிராக ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்துக்குச் சென்று மாநில உரிமைகளை நிலைநாட்டுகிறோம். அரசியல்சட்டத்தின் மாண்பை சிறுமைப்படுத்தும் எண்ணம் கொண்டவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடும்.

தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய தொழிற்சாலைகளை தொழில் வளர்ச்சியை வேலைவாய்ப்புகளை, அடுத்த மாநிலத்துக்கு மிரட்டி அழைத்துச் செல்லும் சதிகாரர்களுக்கு எதிராகப் போராடும். ஆர்.எஸ்.எஸ். ஆசியுடன் இந்திய மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து மீண்டும் மனுதர்மத்தை நிலைநாட்டத் துடிக்கும் ஆதிக்க வெறியர்களுக்கு எதிராகப் போராடும்.

உலகத்துக்கே பொதுவான வள்ளுவருக்குக் காவிக்கறை பூசுவது முதல் கீழடியின் உண்மைகள் நிலத்துக்கடியிலேயே புதைந்துபோக வேண்டும் என்று நினைப்பது வரையிலான வன்மம் இருக்கிறதே, அதற்கு எதிராகப் போராடும். தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கை மூலம் தமிழ்நாட்டின் வலிமையைக் குறைக்கும் சதிக்கு எதிராகப் போராடும். ஏகலைவனின் கட்டை விரலைக் கேட்டதுபோல் திணித்திருக்கும் நீட் எனும் பலிபீடத்துக்கு எதிராகப் போராடும்.

நாட்டையே நாசப்படுத்தினாலும், தமிழ்நாடு மட்டும் 11.19% வளர்ச்சி பெற்று, பிற மாநிலங்களுக்கு ஒளிகாட்டுகிறதே என்று நாள்தோறும் அவதூறுகளைப் பரப்பி, கலவரம் நடக்காதா என ஏங்கிக்கிடக்கும் நரிகளுக்கு எதிராகப் போராடும்.

நாகாலாந்து மக்கள் புறக்கணித்து அனுப்பிய பின்னும் திருந்தாமல், தமிழ்நாட்டு மக்களிடையே குழப்பத்தை உண்டாக்க மட்டுமே பணியாற்றும் ஆளுநருக்கு எதிராகவும் போராடும். இறுதியில் தமிழ்நாடே வெல்லும்! ஒட்டுமொத்த இந்தியாவையும் காக்கும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




## சமயநல்லூரில் அதிமுக சார்பில் பூத் கமிட்டி பாக முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்

சமயநல்லூர். அக்.06

மதுரை மேற்கு தெற்கு ஒன்றியம் சமயநல்லூரில் அதிமுக சார்பில் ஒன்பது பேர் கொண்ட பூத் கமிட்டி மற்றும் பாகப் பொறுப்பாளர்கள் திண்ணை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார், கலந்து கொண்டு பாக முகவர்,மற்றும் கிளைக் கழகச் செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். தொடர்ந்து இரண்டு கிலோமீட்டர் நடைபயணமாக சென்று பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி வரும் 2026 நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் அதிமுகவின் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்கும்படி கேட்டுக் கொண்டார். இதில் மாவட்ட பொறுப்பாளர் அப்துல்சமது,

மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் வெற்றிவேல், வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா, மாணிக்கம்,தமிழரசன், மகேந்திரன், நீதிபதி, ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன், கொரியர்கணேசன், மாவட்டம் மகளிரணி செயலாளர் லெட்சுமி, துணை செயலாளர்கள் சாந்தி,மருதாயி, முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் மலர்கண்ணன், துணைத் தலைவர் ராகுல், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் அம்மு லோகேஸ்வரன்,ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரகுபூபதி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி, நிர்வாகி தங்கமுருகன், சிறுவாலைசெல்வம், அலங்காநல்லூர் வார்டு செயலாளர்கள் சுந்தரராகவன், சுந்தரராஜன்,ஒன்றிய கவுன்சிலர் ரேவதி, உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் சமயநல்லூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மலையாளம் நன்றி தெரிவித்தார்.

## நேரடி கொள்முதல் நிலையங்களில் பிற மாவட்ட நெல்லை கொள்முதல் செய்தால் நடவடிக்கை: திருவள்ளூர் ஆட்சியர்

திருவள்ளூர், அக்.06-

திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு காரீப் கொள்முதல் 20252026 சொர்ணவாரி பருவத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலம் 63 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் மற்றும் தேசிய நுகர்வோர் கூட்டமைப்பு நிறுவனம் மூலம் 5 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் ஆக மொத்தம் 68 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளின் நெல்லினை கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

கொள்முதல் நிலையங்கள் மூலமாக விவசாயிகளிடமிருந்து கடந்த 24ம் தேதி வரையில் 22,735 மெ.டன் நெல்லினை 2,866 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து இதுவரையில் ரூ.53.31 கோடி தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளிடமிருந்து மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படவேண்டும்.

வியாபாரிகள் பிற மாவட்ட நெல்லை கொள்முதல் செய்யப்படுவது கண்டறியப்பட்டால் நேரடி நெல் கொள்முதல் நிலைய பணியாளர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் வியாபாரிகள் மீது காவல்துறை மூலம் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் நெல் கொள்முதல் நிலையங்களில் மேற்கண்ட புகார் குறித்து மண்டல அலுவலக எண்04427664016 மற்றும் கைபேசி எண். 89252 79611ல் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு ஆட்சியர் பிரதாப் தெரிவித்துள்ளார்.

## இந்திய அரசியல் வரலாற்றில் முத்தமிழ் அறிஞர் கலைஞரைப்போல் ஒப்பற்ற தலைவர் யாருமில்லை : ஆத்தூர் தொகுதி பிஎல்ஏ2 வாக்குசாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

### தமிழக மக்களின் நலனுக்காக ஓய்வறியா சூரியன் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வழியில் இளைய சூரியன் உதயநிதியும் செயல்படுகிறார் : அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்

சின்னாளபட்டி, அக்.6

இந்திய அரசியல் வரலாற்றில் முத்தமிழ் அறிஞர் கலைஞரைப்போல் ஒப்பற்ற தலைவர் இதுநாள் வரை யாருமில்லை. அவர் வளர்த்த இயக்கம்தான் தி.மு.க. என்று ஆத்தூர் தொகுதி பிஎல்ஏ2 வாக்குசாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு தமிழக மக்களின் நலனுக்காக ஓய்வறியா சூரியன் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வழியில் இளைய சூரியன் உதயநிதியும் செயல்படுகிறார் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாகக் கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி பிஎல்ஏ2 வாக்குசாவடி முகவர்களை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நேரில் சந்தித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கும் கூட்டம் திண்டுக்கல் முருகபவனம், சுபமங்களா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி தலைமை தாங்கினார். கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, ஆத்தூர் தொகுதி தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் ரெட்டியார்சத்திரம் ப.க. சிவகுருசாமி, பிள்ளையார்நத்தம் முருகேசன், திண்டுக்கல் நெடுஞ்செழியன், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய செயலாளர்கள் இன்பராஜ், மணி, ஆத்தூர் ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், சீவல்சரகு ராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர்கள் சக்திவேல், தங்கராஜ், இளங்கோவன்,





சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் வரவேற்றார். கூட்டத்தின் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தி.மு.க. மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் பிஎல்ஏ2 வாக்குச் சாவடி முகவர்கள் மத்தியில் பேசும்போது வரும் 2026 ம் சட்ட மன்ற தேர்தல் நமக்கு முக்கியமான தேர்தல் ஆகும். காரணம் தமிழகத்தில் உள்ள எதிர்கட்சிகள் அனைத்தும் மறைமுகமாக கைகோர்த்துக் கொண்டு தி.மு.க.வை வீழ்த்தி விடலாம் என்று நினைக்கிறார்கள். அது ஒருபோதும் நடக்காது. காரணம் இந்தியாவின் சிறந்த அரசியல்வாதி இந்திய அரசியலை கரைத்துக்குடித்த ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் கழக தொண்டர்களையும், தமிழக மக்களையும் நேசித்து செயல்பட்டதன் பயனாக தமிழக மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார். கலைஞரைப் போல ஒரு அரசியல் வாதியை இந்திய அரசியல் வரலாற்றில் யாருமில்லை. காரணம் அனைவரும் சமம், அனைவருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்று தொலைநோக்கோடு செயல்பட்டவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார். அவர் வழியில் தமிழகத்தில் எல்லோருக்கும் எல்லாம் அனைவரும் சமம் என்ற கருத்தினைக் கொண்டு அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றக்கூடிய திட்டங்களை செயல்படுத்தி வரும் ஓய்வறியா சூரியன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் செயல்பட்டு வரும் இளையசூரியன் உதயநிதி அவர்களும், செயல்படுத்திவரும் நலத்திட்டங்களால் இன்று உலக அளவில் தமிழக இளைஞர்கள் கல்வி மற்றும் விளையாட்டு துறையில் சாதனை படைத்துவருகிறார்கள் என்றார்.

33 வருடங்களாக ஆத்தூர் தொகுதியில் மக்களோடு மக்களாக சாதி, மத இன வேறுபாடின்றி நான் செயல்பட்டு வருவதால்தான் தொகுதி மக்கள் என்னை தங்கள் வீட்டு செல்லப்பிள்ளையாக கருதுகிறார்கள். அவர்களின் அன்புக்கு நான் என்றும் கடைமைப் பட்டுள்ளேன். ஆத்தூர் தொகுதியில் உள்ள தி.மு.க. தொண்டர்களையும், கட்சியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் நிர்வாகிகளையும் ஒருபோதும் கைவிட மாட்டேன். உயிருள்ளவரை அவர்களின் வளர்ச்சிக்காக என்றும் உறுதுணையாக இருப்பேன் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த அனைத்து கட்சி நிர்வாகிகளும் கைதட்டி தங்களுடைய மகிழ்ச்சியையும், ஆதரவையும் தெரிவித்தனர். இன்று நான் பிஎல்ஏ2 முகவர்களை நேரில் சந்திப்பதற்கு காரணம் ஆத்தூர் தொகுதியில் உள்ள ஒவ்வொரு பிஎல்ஏ2 முகவர்களையும் நான் நேரில் அழைத்து பேசஉள்ளேன். இது தவிர இனி எந்தவொரு நலத்திட்டமாக இருந்தாலும் பயனடையக்கூடிய திட்டமாக இருந்தாலும், அதில் கழகத்தினருக்குத்தான் முன்னுரிமை இருக்கும், இது உறுதி என்றார். அதன் பின்னர் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி ஆத்தூர் தொகுதியில் உள்ள அனைத்து பிஎல்ஏ2 முகவர்களையும் மைக் மூலம் பெயர் சொல்லி அழைக்க ஒவ்வொருத்தராக எழுந்து நின்று அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் வாழ்த்து பெற்றனர். அவர்களை வாழ்த்திப் பேசிய அமைச்சர் அயாது உழைக்க வேண்டும், எதிர்கட்சியினரின் சூழ்ச்சிக்கு இடமளிக்காமல் 2026 சட்டமன்ற தேர்தலில் பம்பரம் போல் சுழன்று கழகத்தின் மாபெறும் வெற்றிக்கு பாடுபட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். நிகழ்ச்சியில் அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், துணைத்தலைவர் ஜெயபால், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், மாவட்ட தொண்டரணி துணைஅமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், கதிரையன்குளம் பாலன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் அய்யம்பாளையம் ரேகா ஐயப்பன், தாடிக்கொம்பு கவிதா சின்னத்தம்பி, கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம், ஸ்ரீராமபுரம் சகிலாராஜா, சின்னாளபட்டி பிரதீபா கனகராஜ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணையமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் ஆலமரத்துப்பட்டி அரவிந்தன், ரெட்டியார்சத்திரம் செல்வம், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வீரக்கல் காங்கேயன், கே.புதுக்கோட்டை ரமேஷ், பன்றிமலை முத்துகிருஷ்ணன், மற்றும் ஒன்றிய, பேரூர் கழக, கிளைக்கழக திமுக நிர்வாகிகள் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# குண்டுவீச்சை நிறுத்துமாறு டிரம்ப் கூறிய பிறகு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 6 பேர் உயிரிழப்பு



ஜெருசலேம், அக்.06-

இஸ்ரேல் ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் 20 அம்ச அமைதி திட்டத்தை அறிவித்தார். இதை ஏற்பதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவித்தார். எனினும் ஹமாஸ் அமைதி காத்ததால் அதற்கு ட்ரம்ப் 3 நாள் கெடு விதித்தார்.

இந்நிலையில் அமைதிக்கு ஹமாஸ் தயாராக இருப்பதாகவும் பிணைக் கைதிகளை விடுவிக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் பிற நிபந்தனைகள் சில வற்றை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ட்ரம்ப் அறிவித்தார். மேலும் காசா மீது குண்டுவீச்சை நிறுத்துமாறு இஸ்ரேலை கேட்டுக்கொண்டார். இந்நிலையில் ட்ரம்பின் இந்த அறிவுரைக்கு அடுத்த சில மணி நேரத்தில் காசாவில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக ஹமாஸின் ஒப்புதலை தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று அதிகாலை, "இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான டிரம்ப் அமைதி திட்டத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது'' என அறிவித்தது.

மேலும் காசாவில் தாக்குதலை குறைக்க ராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# சபரிமலை ஐயப்பன் கோயிலில் தங்கம் மாயமான சர்ச்சை: விஜய் மல்லையா வழங்கிய தங்கத்தில் செம்பு கலப்பா?



பத்தனம்திட்டா, அக்.06-

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் மாயமான விவகாரத்தில், விஜய் மல்லையா நன்கொடையாக வழங்கியது தங்கத் தகடுகள் அல்ல; செம்பு கலக்கப்பட்டவை என்று தகவல் வெளியாகி உள்ளது.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயில் கருவறையின் வெளிப்புறம் மற்றும் பீடத்துடன் கூடிய 2 துவாரபாலகர் சிலைகளுக்கு கடந்த 1999 ம் ஆண்டு தங்கத் தகடுகள் பொருத்தப்பட்டன. இதற்கு முன்னாள் தொழிலதிபர் விஜய் மல்லையா நன்கொடையாக வழங்கிய 30 கிலோ தங்கம் பயன்படுத்தப்பட்டது. இந்த நிலையில், 2 துவாரபாலகர் சிலைகள் மற்றும் அதன் பீடத்தின் மீது உள்ள தகடுகளுக்கு தங்க முலாம் பூசும் பணி பெங்களூரு தொழிலதிபர் உன்னிகிருஷ்ணன் போற்றியிடம் தரப்பட்டது.

பணி முடிந்த பிறகு, சென்னையில் உள்ள பிரபல நடிகர் ஜெயராம் வீட்டுக்கு அந்த தகடுகளை கொண்டு சென்று பூஜை போட்டுள்ளனர். அப்போது ஜெயராம் தட்சிணையாக பணம் கொடுத்துள்ளார். பின்னர் தங்க முலாம் பூசிய தகட்டை கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளனர். இதற்கிடையே, 42.8 கிலோவாக இருந்த தகடுகளில் 4 கிலோ தங்கம் மாயமானதாக கூறப்படுகிறது.

இது குறித்து உன்னிகிருஷ்ணன் போற்றி கூறும்போது, "துவாரபாலகர் சிலைகள் பராமரிப்புக்காக கொடுக்க ப்பட்டபோது என்னிடம் கொடுத்த ஆவணத்தில் செம்பால் ஆன தகடுகள் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவேளை தங்க முலாம் தேய்ந்து போய் இருக்கலாம். அதனால் திருவாங்கூர் தேவசம் போர்டு தங்க முலாம் பூச முடிவு செய்திருக்க லாம்'' என்றார்.

நடிகர் ஜெயராம் கூறும் போது, ''சென்னையில் உள்ள தொழிற்சாலையில் 'எலெக்ட்ரோ பிளேட்டிங்' பணிக்காக தங்கத் தகடுகள் கொடுக்கப்பட்டுள்ளதாக உன்னிகிருஷ்ணன் என்னிடம் கூறினார். உடனே நண்பர்களுடன் சென்று பார்வையிட்டேன். கோயிலுக்கு அனுப்பி வைப்பதற்கு முன்பு எனது வீட்டில் சிறிது நேரம் வைத்து பூஜை செய்ய முடியுமா என்று கேட்டேன். அவரும் ஒப்புக்கொண்டதால், சபரிமலை கோயில் தங்கத் தகடுகளை என் வீட்டுக்கு கொண்டு வந்து பூஜை செய்தனர். உடனடியாக கோயிலுக்கும் அனுப்பி வைத்தனர். இதற்காக, உன்னிகிருஷ்ணனுக்கு நான் பணம் எதுவும் தரவில்லை'' என்றார்.

# கரூர் துயரம்: சைபர் க்ரைம், தனிப்படை அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை



கரூர், அக்.06-

கரூர் தவெக பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த வழக்கு விசாரணைக்காக அமைக்கப்பட்ட அஸ்ரா கார்க் ஐபிஎஸ் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழு நேற்று (அக்5ம் தேதி) விசாரணையைத் தொடங்கியது.

சம்பவம் நடந்த வேலுச்சாமிபுரத்தில் 45 நிமிடங்கள் சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணை மேற்கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஐ ஜி அஸ்ராக் காரக், "நீதிமன்ற உத்தரவுப்படி முதல் கட்ட விசாரணையை இன்று தொடங்கியுள்ளோம். விசாரணை நடந்து வருகிறது. இந்தக் குழுவில் இரண்டு டிஎஸ்பிக்கள், இரண்டு எஸ்பிக்கள், 5 ஆய்வாளர்கள் உள்ளனர். விசாரணையை இப்போது தான் தொடங்கினோம் என்பதால் வேறு விவரங்கள் ஏதும் தெரிவிக்க இயலாது." என்றார்.

முதற்கட்டமாக கரூர் சைபர் க்ரைம் உதவி ஆய்வாளர் சுதர்சன், கரூர் தனிப் படை காவலர் மோகன் ஆகியோர் நடந்த சம்பவம் குறித்து சிறப்பு புலனாய்வு குழுவினரிடம் தெரிவித்தனர். பின்னர், முதல்கட்ட விசாரணையை முடித்து விட்டு சிறப்பு புலனாய் குழுவினர் புறப்பட்டனர்.

கரூர் விபத்தும், விசாரணைக் குழு அமைப்பும்: கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்.27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 116 பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் அன்றைய தினம் இரவே தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கரூர் வந்து உயிரிழந்தவர்கள் உடலுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும் பத்தினர் மற்றும் காயமடை ந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண நிதியை அறிவித்துச் சென்றார்.

இது தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டு அவர் சம்பவம் நடந்த வேலுசாமிபுரம், கரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் சிகிச்சை பெற்று வந்தவர்கள், உயிரிழந்தர்கள் குடும்பங்களை சந்தித்து 2 நாட்கள் விசாரணை நடத்தினார்.

இதுதொடர்பாக கரூர் நகர போலீஸார் தவெக கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச் செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், மாநில இணைச் செயலாளர் சிடி.ஆர். நிர்மல்குமார் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்தனர். மேலும் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், மற்றொரு நிர்வாகி பவுன்ராஜ் ஆகியோரை கைது செய்தனர். மேலும் தலைமறைவான பொதுச்செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், மாநில இணைச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோரை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயர் நீதிமன்றம் இவ்வழக்கை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்க உத்தரவிட்ட நிலையில் தமிழக அரசு வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்தது.

# டார்ஜிலிங்கில் கனமழையால் நிலச்சரிவு: 9 பேர் பலி மீட்புப் பணியில் என்டிஆர்எஃப்



டார்ஜிலிங், அக்.06-

மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங்கில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் மாயமாயினர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

கடந்த மாதம் டெல்லி, பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் போன்ற மாநிலங்களில் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலர் உயிரிழந்தனர். இப்போது, மேற்குவங்க மாநிலத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் இமயமலையை ஒட்டி உள்ள மலைப் பிரதேசங்களான டார்ஜிலிங், கலிம்போங், கூச்பெஹார், ஜல்பைகுரி போன்ற பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

இதில், டார்ஜிலிங்கில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். இந்த நிலச்சரிவானது டார்ஜிலிங்கின் மிரிக் சுகியாபோக்ரி சாலையில் உள்ள மலைப்பாதைகளில் நிகழ்ந்துள்ளது. இதனால் போக்குவரத்து முடங்கியுள்ளது. மேலும், வீடுகள், சாலைகள் மண்ணில் புதைந்துள்ளதால் பலி எண்ணிக்கை உயரும் என்று அஞ்சப்படுகிறது. தொலைத் தொடர்பு சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளதால் பாதிப்புகள் பற்றிய மேலதிக துல்லிய விவரங்கள் வந்து சேர்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், டார்ஜிலிங் மாவட்ட நிர்வாக மூத்த அதிகாரி ஒருவர் அளித்தப் பேட்டியில், "மீட்பு, நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. உள்ளூர் நிர்வாகம், காவல்துறை மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுக்கள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளன." என்றார்.

தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் இதுவரை 9 இறப்புகளை உறுதி செய்துள்ளனர். இன்னும் 2 பேரை தேடி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

டார்ஜிலிங்கின் சார்ஸ்லே, ஜெஸ்பீர்கான், மிரிக் பஸ்தி, தார் கான், மிரிக் லேக் ஏரியா ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தார் கான் பகுதியில் மட்டும் மண்ணில் புதைந்த 4 பேர் மீட்கப்பட்டனர்.

ரெட் அலர்ட்: இதற்கிடையில், மேற்கு வங்கம், டார்ஜிலிங், கலிம்பாங் ஆகிய பகுதிகளில் நாளை (அக்.6) வரை அதிகனமழைக்கான வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் ரெட் அலர்ட் விடுத்துள்ளது. அதேபோல் இன்னும் பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளதாகவும் கணித்துள்ளது.

தசரா விடுமுறையை ஒட்டி டார்ஜிலிங்குக்கு சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர் வந்திருந்த நிலையில் நிலச்சரிவால் அவர்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அவர்களின் உதவிக்காக காவல் கட்டுப்பாட்டு அறை 91478 89078 என்ற தொடர்பு எண்ணை அறிவித்துள்ளது.

பிரதமர் மோடி இரங்கல்: இந்நிலையில், டார்ஜிலிங் நிலச்சரிவில் உயிரிழந்தோருக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "டார்ஜிலிங் நிலச்சரிவில் பலர் உயிரிழந்திருப்பது வருத்தமளிக்கிறது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து வாடும் அனைவருக்கும் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைந்து குணமாகட்டும்.

கனமழை, நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள டார்ஜிலிங் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள களநிலவரம் பற்றி உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவியையும் வழங்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.'' என்று தெரிவித்துள்ளார்.

## தசரா பண்டிகைக்கு மாமியார் வீட்டுக்கு வந்த மருமகனுக்கு 100 வகை உணவுகளுடன் விருந்து



ஹைதராபாத், அக்.06-


தெலங்கானாவில் தசரா பண்டிகையை கொண்டாட மாமியார் வீட்டிற்கு வந்த மருமகனுக்கு 100 வகையான உணவுகளுடன் பிரம்மாண்ட விருந்து அளிக்கப்பட்டது. அதோடு மருமகனுக்கு ஒரு சவரன் நகை பரிசாக வழங்கப்பட்டது.

தெலங்கானா மாநிலம், வனபர்த்தி மாவட்டத்தைச் சேர்ந்தவர் சிந்து. இவருக்கும் வாரங்கலை சேர்ந்த சுரேஷ் என்பவருக்கும் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு திருப்பதியில் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு பிறகு நவராத்திரி பண்டிகை வந்ததால் புதுமண தம்பதியினர் கொத்தகோட்டாவிற்கு வரும்படி பெண் வீட்டார் அழைப்பு விடுத்தனர். இதையேற்று சுரேஷும் சிந்துவும் கொத்தகோட்டாவுக்கு சென்றனர்.

பெண் வீட்டார் சார்பில் புதுமண தம்பதிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மருமகனுக்காக 101 வகையான உணவுகளை சமைத்து தருவதாக மாமியார் உறுதி அளித்திருந்தார். அதில் ஒன்று குறைந்தால்கூட ஒரு சவரன் நகை போட வேண்டும் என்று நகைச்சுவைக்காக மருமகன் நிபந்தனை விதித்தார்.

இந்த சூழலில் 60 இனிப்பு வகைகள், முறுக்கு, சீடை என 30 அரிசி மாவு வகைகள், 10 வகையான பொறியல் என மருமகனுக்கு பிரம்மாண்ட விருந்து அளிக்கப்பட்டது. அப்போது இலையில் பரிமாறப்பட்ட உணவு வகைகளை எண்ணியபோது 100 வகையான தின்பண்டங்களே இருந்தன. இதைத் தொடர்ந்து பெண் வீட்டார் சார்பில் மாப்பிள்ளைக்கு ஒரு சவரன் நகை பரிசாக வழங்கப்பட்டது.

## சர்வேயர், வரைவாளர் பதவிகளுக்கு அக்.13ம் தேதி 5வது கட்ட கலந்தாய்வு: டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு



சென்னை, அக்.06-

டிஎன்பிஎஸ்சி செயலாளர் எஸ்.கோபால சுந்தரராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு நிலஅளவை பதிவேடுகள் சார்நிலை பணியில் அடங்கிய நிலஅளவர் (சர்வேயர்), வரைவாளர் பதவிகளில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கான 5வது கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு அக்டோபர் 13ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தேர்வர்களின் பதிவெண்கள் அடங்கிய பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் (ஷ்ஷ்ஷ்.மீஸீஜீ ஷ்.றீஷீஸ்.வீஸீ) வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட தேர்வர்களுக்கு மட்டும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அழைப்பாணையை தேர்வாணையத்தின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அழைப்பாணை தபால் மூலம் அனுப்பப்பட மாட்டாது. சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்படும் அனைத்து தேர்வர்களும் கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்பட்டு, பணிக்கு தேர்வு செய்யப்படுவர் என்பதற்கு உறுதி அளிக்க இயலாது. குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துகொள்ள தவறினால் மறுவாய்ப்பு வழங்கப்பட மாட்டாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கீ ஆன்ஸர் வெளியீடு: ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (டிப்ளமா மற்றும் ஐடிஐ கல்வித் தகுதி) தொடர்பாக டிஎன்பிஎஸ்சி தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் ஏ.சண்முகசுந்தரம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (டிப்ளமா மற்றும் ஐடிஐ ) அடங்கிய பதவிகளில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கான தேர்வுகள் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 7 முதல் 27ம் தேதி வரை வெவ்வேறு நாட்களில் நடத்தப்பட்டன.

அதில் ஓஎம்ஆர் வகை தேர்வாக ஆகஸ்ட் 31ம் தேதி நடைபெற்ற தமிழ் தகுதித்தேர்வு, திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு தேர்வுக்கான உத்தேச விடைகள் (கீ ஆன்ஸர்) தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மேல்முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள், அக்டோபர் 7ம் தேதி மாலை 5.45 மணிக்குள் தேர்வாணையத்தின் இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் முறையீடு செய்யலாம். அஞ்சல் மற்றும் மின்னஞ்சல் வழியாக பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படாது' என தெரிவித்துள்ளார்.

## முதல்நிலை தேர்வு முடிந்தவுடன் விடை குறிப்புகள் வெளியிட யுபிஎஸ்சி முடிவு

புதுடெல்லி, அக்.06-

யுபிஎஸ்சி நடத்தும் சிவில் சர்வீஸ் தேர்வு நடத்துவதில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க கோரி ஹிமான்ஷு குமார் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்களை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ்.நரசிம்மா, ஏ.எஸ்.சந்துருக்கர் அமர்வு விசாரித்து வருகிறது.

கடந்த மே 15ம் தேதி நடைபெற்ற விசாரணையின்போது, முதல்நிலை தேர்வு முடிந்த உடனே விடைக் குறிப்புகள் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்துக்கு உதவ நியமிக்கப்பட்ட மூத்த வழக்குரைஞர் ஜெய்தீப் குப்தா தெரிவித்தபோது, யுபிஎஸ்சி சார்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, இந்த விவகாரத்தை உச்ச நீதிமன்றம் நாளை மீண்டும் விசாரிக்கவுள்ள நிலையில், யுபிஎஸ்சி ஏற்கெனவே எடுத்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது. முதல்நிலை தேர்வு முடிந்த உடனே விடைக் குறிப்புகள் வெளியிடப்படும் என்று தெரிவித்துப் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது.



## சிங்கம் மாயமானதாக வெளியான தகவலுக்கு வண்டலூர் உயிரியல் பூங்கா நிர்வாகம் மறுப்பு

சென்னை, அக்.06-

சென்னை வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சிங்கம் மாயமானதாக வெளியான தகவலுக்கு பூங்கா நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது. லயன் சஃபாரி பகுதியில் விடப்பட்ட சிங்கம் உணவுக்கு திரும்பி வராததால் காணாமல் போனதாக தகவல் பரவியதாகவும் ஆனால் உலாவித்தில் சிங்கம் இருப்பதை ஊழியர்கள் கண்டறிந்துள்ளதாகவும் பூங்கா நிர்வாகத்தினர் தகவல் தெரிவித்துள்ளனர்.






# சிவகாசி அருகே பட்டாசுக் கடையில் விபத்து: பல லட்சம் மதிப்பிலான பட்டாசுகள் சேதம்

சிவகாசி, அக்.06-

சிவகாசி அருகே அனுப்பங்குளத்தில் உள்ள சி.எஸ்.கே பட்டாசு கடையில் ஞாயிறு காலை ஏற்பட்ட வெடி விபத்தில் பல லட்சம் மதிப்பிலான பட்டாசுகள் வீணானது.

சிவகாசி ரிசர்வ் லைன் பகுதியைச் சேர்ந்தவர் கார்த்திகேயன் (28). இவர் சிவகாசி சாத்தூர் சாலையில் அனுப்பன்குளம் அருகே மயிலாடுதுறை கிராமத்தில் சி.எஸ்.கே கிராக்கர்ஸ் என்ற பெயரில் பட்டாசுக் கடை நடத்தி வருகிறார். ஞாயிறு காலை வழக்கம் போல் கடையைத் திறந்து தொழிலாளர்கள் விற்பனையில் ஈடுபட்டனர்.

காலை 11 மணி அளவில் பட்டாசுக் கடையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. கடையில் இருந்தவர்கள் உடனடியாக வெளியேறினர். சிறிது நேரத்தில் பட்டாசுகள் அனைத்தும் பயங்கர சத்தத்துடன் வெடிக்கத் தொடங்கியது. தகவலறிந்து 3 வாகனங்களில் வந்த சிவகாசி தீயணைப்புத் துறையினர் ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

சாலை ஓரத்தில் கடை உள்ளதால் சிவகாசி சாத்தூர் சாலையில் ஒரு மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. விபத்துக்கான காரணம் குறித்து சிவகாசி கிழக்கு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சித்தயன்கோட்டை ஸ்ரீசெந்தாமரை சப்தகன்னிமார் கோவில் கும்பாபிஷேகம் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கோவில் கமிட்டியார்கள் கும்ப மரியாதையுடன் உற்சாக வரவேற்பு

## அனைத்து சமுதாய மக்களும் ஒற்றுமையுடன் கொண்டாடும் விழாக்களில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி கிடைக்கிறது அமைச்சர் ஐ.பெரியசாமி




சின்னாளபட்டி, அக்.06-

சித்தயன்கோட்டை ஸ்ரீசெந்தாமரை சப்தகன் னிமார் கோவில் கும்பாபிஷேகம் விழாவில் கலந்துகொள்ளவந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு கோவில் கமிட்டியார்கள் பரம்பரை அறங்காவலர் பரமசிவம் தலைமையில் கும்ப மரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர். அனைத்து சமுதாய மக்களும் ஒற்றுமையுடன் கொண்டாடும் விழாக்களில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி கிடைக்கிறது என அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் சித்தயன்கோட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட 6 மற்றும் 11வது வார்டு பகுதியில அமைந்துள்ளது. அருள்மிகு ஸ்ரீசெந்தாமரை சப்தகன்னிமார் திருக்கோவில் இக்கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கோவிலுக்கு வருகை தந்த திமுக மாநில துணைப்பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களுக்கு கோவில் பரம்பரை அறங்காவலர் பரமசிவம் தலைமையில் கோவில் கமிட்டியார்கள் பூரன கும்ப மரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதன்பின்னர் கோவில் உள்ளே வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு அறங்காவலர் பரமசிவம் தலைமையில் கமிட்டி யார்கள் பரிவட்டம் கட்டி மாலை அணிவித்து மரிய ாதை செலுத்தினார்கள். அதன்பின்னர் நிர்வாகிகள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் அனைத்து சமுதாய மக்கள் ஒற்றுமையுடன் கொண்டாடும் இம்மாதிரி விழாக்களில் கலந்துகொ ள்ளும்போது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இதுபோல அனைவரும் ஒற்றுமை யுடன் சந்தோ சமாக வாழவேண்டும் என்றார். நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், சித்தயன்கோட்டை பேரூராட்சிமன்ற தலைவர் போதும்பொன்னு முரளி, செயல் அலுவலர் ஜெயமாலு, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, பரம்பரை அறங்காவலர் பரமசிவம், ஊர் முக்கிய பிரமுகர்கள் பொன்ராம், அறிவழகன், முன்னால் செயல் அலுவலர் கோட்டை ச்சாமி, சித்தயன்கோட்டை பேரூராட்சிமன்ற தலைவர் போதும்பொன்னு முரளி, சித்தயன்கோட்டை பேரூர்கழக செயலாளர் சக்திவேல், முன்னால் வார்டு உறுப்பினர்கள் குமரேசன், சுப்பிரமணி, திமுக மாவட்ட பிரதிநிதி சௌந்தரபாண்டியன், சித்தையன்கோட்டை பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் தியாகு, லாவண்யா சுரேஷ், திமுக வார்டு செயலாளர்கள் தங்கவேல், மனோகரன், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# கொடைக்கானல் பேருந்து நிலையத்தில் இரவு நேரத்தில் ஒய்யாரமாக உலா வந்த காட்டெருமைகள்; மயிரிழையில் உயிர் தப்பிய சுற்றுலாபயணி



திண்டுக்கல், அக்.06-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக வனப்பகுதியை விட்டு வெளியேறும் காட்டெரு மைகள் நகர்ப்பகுதிக்குள் உலா வருவதும், குடியிருப்பு பகுதிக்குள் முகாமிடுவதும் வாடிக்கையாக உள்ளது.

இந்நிலையில் இன்று இரவு நேரத்தில் வனப்பகுதியை விட்டு வெளியேறிய இரண்டு காட்டெருமைகள் திடீரென பேருந்து நிலையத்திற்குள் உலா வந்தது. இதனால் பேருந்துக்காக காத்திருந்த பயணிகள் பதறி ஓடினர். மேலும் சாலையில் நடந்து சென்ற பொதுமக்கள் மற்றும் இரு சக்கர வாகன ஓட்டிகள் பதற்றம் அடைந்தனர்.

குறிப்பாக சாலையில் முன்பாக சென்ற காட்டெருமையை பார்த்து கொண்டிருந்த சுற்றுலா பயணி ஒருவர் பின் புறத்தில் வந்த மற்றொரு காட்டெருமையை கண்டு அலறியடித்து ஓடினார், நல்வாய்பாக அப்பகுதியில் இருந்தவர்கள் கூச்சலிட்டத ால் அந்த சுற்றுள்ள பயணி திரும்பி பார்த்ததால் உயிர் தப்பினார். இதனை தொடர்ந்து பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் நில பகுதிக்குள் அந்த இரண்டு காட்டெருமைகலும் சென்றது. இதனால் பேருந்து நிலைய பகுதி சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது.

பொதுமக்கள் அதிகம் நடமாடும் இடங்களில் இது போன்ற வன விலங்குகள் அடிக்கடி உலாவருவது மனித விலங்கு மோதல் ஏற்படுவதற்கு சூழல் நிலவி வருவதால் , வேட்டை தடுப்பு பணியாளர்களை பணியில் அமர்த்தி காட்டெருமைகள் உலா வருவதை தடுத்து அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களிடையே வேண் டுகோள் எழுந்துள்ளது.



# "விஜய்யுடன் கூட்டணி பாவமல்ல, சாபம்" திருநாவுக்கரசருக்கு காசிமுத்துமாணிக்கம் கண்டனம்

சென்னை, அக்.06–

'விஜய்யுடன் கூட்டணி அமைப்பது பாவமல்ல, சாபம்' என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திருநாவுக்கரசருக்கு திமுக வர்த்தக அணி செயலாளர் காசிமுத்துமாணிக்கம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கரூரில் தவெக தலைவர் விஜய் பங்கேற்ற கூட்டத்தில், 41 பேர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி, விஜய்யை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். இதனால், கூட்டணி மாற்றம் தொடர்பான பேச்சு எழுந்தது. இதுதொடர்பாக, காங்கிரஸ் முன்னாள் தலைவர் திருநாவுக்கரசரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ''விஜய்யுடன் கூட்டணி அமைத்தால் அது ஒன்றும் பாவம் இல்லையே?'' என்று கூறியிருந்தார்.

விஜய்யுடன் ராகுல் பேச்சு:

இந்நிலையில், திமுக வர்த்தக அணி செயலாளர் காசிமுத்துமாணிக்கம் வெளியிட்ட அறிக்கையில் கூறி யிருப்பதாவது: விஜய்யை பாஜகவின் ஸ்லீப்பர் செல்லாக பார்க்கும் நிலையில், அவரிடம் ராகுல் பேசியதை நாங்கள் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், விஜய்யுடன் கூட்டணி அமைப்பது பாவமா என திருநாவுக்கரசர் கேட்பது எதிர்கால நம்பிக்கைக்கு உகந்தது அல்ல. திமுகவினருக்கும் கர்நாடகத்தில் ஆட்சியில் பங்கு கேட்க ஆசைதான். அதேபோல், புதுச்சேரியில் ஆட்சிக்கு திமுக தலைமை தாங்க ஆசைதான். அதை பேசினால் தவறில்லை என்று திருநாவுக்கரசர் கூறுவாரா? ஒரே கூட்டத்தை ஊர் ஊராக அழைத்துச் சென்று, ஒரே இடத்தில் நின்று கலாட்டா செய்வதைக் கண்டிக்காதது ஏன்? இறந்தவர்கள் அனைவரும் கரூர் இல்லை. தருமபுரி, திருப்பூர், நாமக்கல், ராமநாதபுரம், நெல்லை என பட்டியல் நீளும் நிலையில் அதை ஏன் கண்டிக்கவில்லை? மருத்துவமனையில் இருப்பவர்களுக்கு அப்போலோவில் மருத்துவம் பார்க்கிறேன் என்று ஒரு அறிக்கைகூட விடாத விஜய்யை கண்டியுங்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# '18 எம்எல்ஏக்களை அரசியல் அநாதையாக்கியவர் டிடிவி தினகரன்' ஆர்.பி.உதயகுமார் குற்றச்சாட்டு

மதுரை, அக்.06–

மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அதிமுக சார்பில் திண்ணை பிரச்சாரம் சமயநல்லூரில் நடந்தது. இதில் பங்கேற்ற சட்டப்பேரவை எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்பி. உதயகுமார் பேசியதாவது; தமிழகம் முழுவதும் 234 தொகுதிகளில் திமுகவின் துரோகங்களை சக்கர வடிவில் அச்சடிக்கப்பட்டு திண்ணைப் பிரச்சாரம் மூலம் வாக்காளர்களுக்கு வழங்கப்படுகிறது.

எப்போது ஒருவர் திமுகவையும், ஸ்டாலினையும் பாராட்டி புகழ்ந்து பேசுகிறாரோ, அப்போதே அவர் அதிமுக பற்றி பேச தகுதியை இழந்து விடுகிறார் என்பது தான் நிதர்சனமான உண்மையாக பார்க்கப்படுகிறது.

இதுதான் தொண் டர்கள் மக்களின் தீர்ப் பாகும். 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் யார் தமிழ கத்தில் முதல்வராக வரவேண்டும் என தொண்டர்களின் நம்பிக்கை இழந்து ,மக்களின் நம்பி க்கை இழந்து, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு தனிநபர் கருத்தை யாரும் பொருட்படுத்த அவசியமில்லை.

அதிமுக தொண்டர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரின் வழியில், திமுகவின் உண்மை முகத்தை, குடும்ப வாரிசை, மன்னராட்சியை அழித்து மீண்டும் ஜனநாயகத்தை மலரச் செய்யும் வகையில் இன்றைக்கு பொதுச்செயலாளர் பழனிசாமி இயக்கத்தை மீட்டு தொண்டர்களுக்கும், மக்களுக்கும் பாதுகாப்பு அரணாக உள்ளார்.

இன்றைக்கு அந்த லட்சியத்தை விலக்கி பொது நலன், மக்கள் நலம், தொண்டர் நலன் மறந்து , சுயநலத்தின் மொத்த உருவமாக தஞ்சையில் கருத்து கந்தசாமியாக (தினகரன்) கருத்து சொல்லி உள்ளார். தமிழகத்தில் யார் முதல்வராக வரவேண்டும், வரக்கூடாது என, தமிழக மக்கள் தான் தீர்ப்பு சொல்லவேண்டும்.

மக்கள், தொண்ட ர்களால் நிராகரிக்கப்பட்ட தனிநபர் விருப்பம் மக்களிடம் பிரதிபலிக்காது. இதுதான் கடந்த கால வரலாறு. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கண்ணை மூடிக்கொண்டு பேசும் கருத்து கந்தசாமிக்கு சில வரலாறை நான் கூற கடமைப்பட்டுள்ளேன்.

2026 சட்டமன்ற தேர் தலில் பொதுச்செயலாளர் வெற்றிவாகை சூடி மீண்டும் அதிமுக ஆட்சியை நிச்சயம் மலரச் செய்வார் .அதற்கு உங்களுக்கு எந்த சந்தேகமும், உங்களுக்கு கவலையும் வேண்டாம். எங்களின் எதிர்கால அரசியல் பாதையை நீங்கள் தீர்மா னிக்க தேவையில்லை. இன்றைக்கு உங்களை புரிந்து கொண்டவர்கள் விலகிச் சென்றார்கள், புரிந்து கொண்டவர்கள் தற்போது விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள், புரியா தவர்கள் புரிந்து இனிமேல் காலம் தாழ்த் தாமல் அவரை விட்டு விலகிச் செல்லவேண்டும். அவரை நம்பிவர்களெல்லாம் திமுகவுக்கு வழி அனுப்பி வைத்தார்.

முன்னாள் அமைச்ச ர்கள் செந்தில் பாலாஜி, பழனியப்பன், தங்கத்தமிழ் செல்வன் என்று பட்டியல் நீண்டு கொண்டு செல்கிறது. மேலும் அவர் உண்மை முகத்தை தெரிந்து கொண்ட மகேந்திரன், உமாதேவன் உள்ளிட்ட பல பேர் இன்றைக்கு எடப்பாடியாரின் தலை மையை ஏற்றுள்ளனர். உங்களை நம்பி 18 சட்டப்பேரவை உறுப்பி னர்கள் கையெழுத்து போட்டார்கள். அவர் களை அரசியல் அநாதையா க்கிவிட்டீர்கள். உங்களது தளபதியாக இருந்தவர்கள் இன்றைக்கு ஸ்டாலினுக்கு தளபதியாக மாறி விட்டனர்.இதற்கு பதிலை சொல்லுங்கள்? அம்மாவின் கொடியை வைத்துக் கொண்டு திமுகவை பாராட்டுவது பச்சை துரோகம். இவ்வாறு அவர் பேசினார்.

# பொதுக்கூட்ட பாதுகாப்பு விதிகள் வகுக்கப்படும் வரை கட்சி நிகழ்ச்சிகளுக்கு இடைக்கால அனுமதி வழங்குக: அன்புமணி

சென்னை, அக்.06-

பொதுக்கூட்டங்களுக்கான பாதுகாப்பு விதிகள் வகுக்கப்படும் வரை மக்கள் கூடும் இடங்களில் அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், நடைபயணங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை நடத்திக் கொள்ள இடைக்கால அனுமதியை அரசு அளிக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், "கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்புகள் தொடர்பான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை பிறப்பித்த சில உத்தரவுகளைத் தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த அனுமதிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

புதிய நிகழ்ச்சிகளுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. பொது நிகழ்ச்சிகளில் மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியம் எனும் நிலையில், ஒரு நிகழ்வைக் காரணம் காட்டி அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிகளை தடை செய்வது ஏற்றுக்கொள்ள முடியாதது.

கரூரில் கடந்த செப்டம்பர் 27 ஆம் நாள் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 40க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து கரூர் நெரிசல் உயிரிழப்புகளுக்கான காரணம் குறித்து சிபிஐ விசாரணைக்கு ஆணையிட வேண்டும்; இனிவரும் காலங்களில் இத்தகைய விபத்துகள் நடக்காமல் தடுக்க விதிகளை வகுக்க அரசுக்கு ஆணையிட வேண்டும் என்று கோரி மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அவற்றை விசாரித்த மதுரை உயர் நீதிமன்றக் கிளை பிறப்பித்த இடைக்காலத் தீர்ப்பில், "தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் பொதுக் கூட்டங்களை நடத்த எந்தக் கட்சிக்கும் அனுமதி அளிக்கக்கூடாது என்று இடைக்கால ஆணை பிறப்பிக்கிறோம். பொதுக் கூட்டங்களை நடத்துவதற்காக ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கு இந்தத் தடை பொருந்தாது.

ஏதேனும் பகுதிகளில் பொதுக்கூட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடம் இல்லாத பட்சத்தில், அதற்கான இடத்தை சம்பந்தப்பட்ட தேர்வு செய்து தரும்படி சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளை அதிகாரிகள் கேட்டுக்கொள்ள வேண்டும்; அவ்வாறு அவை தேர்வு செய்து தரும் இடம் பாதுகாப்பானதாகவும், அவசர ஊர்தி உள்ளிட்ட வாகனங்கள் வந்து செல்லும் வசதி கொண்டதாகவும் இருக்கும் பட்சத்தில் அங்கு கூட்டங்களை நடத்த நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம்'' என்று கூறியுள்ளது. இதை சென்னை உயர் நீதிமன்றத்தின் முதன்மை அமர்வும் உறுதி செய்திருக்கிறது.

மதுரை உயர் நீதிமன்றக் கிளையின் இந்த இடைக்கால ஆணையைத் தொடர்ந்து மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் நான் மேற்கொள்ளவிருந்த தமிழக மக்களின் உரிமை மீட்பு பயணத்திற்கு வழங்க ப்பட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டிருக்கிறது; பொதுக்கூட்டங்களை மட்டும் ஊருக்கு ஒதுக்குப்புறமான இடங்களில் நடத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோவை, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் மாவட்டங்களில் எந்த நிகழ்ச்சிக்கும் அனுமதி வழங்க காவல்துறை மறுக்கிறது. பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கான விதிகள் வகுக்கப்படும் வரை தங்களால் எந்த முடிவும் எடுக்க முடியாது என்று காவல்துறை தட்டிக் கழிக்கிறது. இது ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற விடாமல் அரசியல் கட்சிகளின் குரல்வளையை நெறிக்கும் செயலாகும்.



அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் நடைபெறும் போது அவற்றுக்கு வருபவர்களின் பாதுகாப்பை சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் தான் உறுதி செய்ய வேண்டும்; பங்கேற்கும் மக்களுக்கு குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள், தேவை ஏற்பட்டால் அழைப்பதற்கு தயாராக அவசர ஊர்தி உள்ளிட்ட மருத்துவ வசதிகளை சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் தான் செய்ய வேண்டும் என்ற உயர்நீதிமன்றக் கிளையின் கருத்தை பாட்டாளி மக்கள் கட்சி ஏற்றுக்கொள்கிறது.

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் பல லட்சம் மக்கள் பங்கேற்ற ஏராளமான மாநாடுகளும், பொதுக்கூட்டங்களும், போராட்டங்களும் இத்தகைய நிபந்தனைகளை தாமாக கடைபிடித்து நடத்தப்பட்டுள்ளன. அவற்றில் எந்தவொரு விரும்பத்தகாத நிகழ்வுகளும் நடக்க வில்லை.

அதேநேரத்தில் கூட்ட ஏற்பாட்டாளர்களால் முறையாக விதிமுறைகள் கடைபிடிக்கப்படாத, காவல்துறையால் முறையாக ஒழுங்குபடுத்தப்படாத ஒரு துயர நிகழ்வை காரணம் காட்டி அரசியல் கட்சிகளின் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் தடை விதிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது பாசிசம் தலைதூக்க வழிவகுத்துவிடும். இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19(1)(ஏ), 19(1)(பி) ஆகிய பிரிவுகளின்படி வழங்கப்பட்டுள்ள பேச்சு உரிமை, கருத்துரிமை, அமைதியாக ஓரிடத்தில் ஒன்று கூடும் உரிமை ஆகியவற்றை பறிக்கும் செயலாகும்.

ஆட்சியாளர்களின் தவறுகளை எடுத்துக் கூறுவதும், நாட்டு நிலைமை குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதும் அரசியல் கட்சிகளின் கடமை ஆகும். போராட்டங்கள், பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், பேரணிகள், நடைபயணங்கள், துண்டுபிரசுரங்களை வழங்குதல் ஆகிய நிகழ்வுகளின் மூலம் தான் இவற்றை செய்ய முடியும்.

மக்கள் கூடும் இடங்களில் தான் இந்த நிகழ்ச்சிகளை நடத்த முடியும். ஆனால், உயர்நீதிமன்றக் கிளையின் இடைக்காலத் தீர்ப்பைத் தொடர்ந்து தனியார் இடங்களில் இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்திக் கொள்ளும்படி காவல்துறையும், மாவட்ட நிர்வாகங்களும் கட்டாயப்படுத்துகின்றனர். இதை ஏற்க முடியாது.

அரசியல் கட்சிகள் மக்களைத் தேடிச் செல்ல வேண்டுமே தவிர, மக்களை தங்களை நோக்கி வரும்படி கட்டாயப் படுத்தக் கூடாது. ஆளில்லாத இடங்களில் இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவதும் சாத்தியமற்றது. தனியார் இடங்களை தேர்வு செய்து நிகழ்ச்சிகளை நடத்திக் கொள்ளும்படி, உயர்நீதிமன்றத் தீர்ப்பை சுட்டிக்காட்டி காவல்துறையினர் கூறுவது கட்சிகளின் செயல்பாட்டை முடக்கும் செயலாகும். இதற்கு நீதிமன்றங்கள் துணைபோகக் கூடாது.

ஏற்கனவே, பொது இடங்களில் உள்ள அரசியல் கட்சிகளின் கொடிக்கம்பங்களை அகற்ற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் கட்சிகளின் நோக்கம் மக்களுக்கு நன்மையும், சேவையும் செய்வது தான். மக்கள் பணியாற்றும் கட்சிகள், இயக்கங்களின் கொடிக்க ம்பங்களை பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் பாதிப்பு இல்லாத வகையில் பொதுஇடங்களில் தான் அமைக்க முடியும்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் அப்படித் தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனியார் இடத்தை வாங்கி அதில் தான் கொடிக்கம்பங்களை அமைக்க வேண்டும் என்றால், மக்கள் நல நோக்கம் கொண்ட எந்தக் கட்சியும் கொடிக்கம்பங்களை அமைக்கமுடியாது. ஊழல் செய்து சொத்து சேர்த்தக் கட்சிகள் மட்டும் தான் அதை செய்ய முடியும். அதையெல்லாம் உணர்ந்து தான் கொடிக்கம்பங்களை அகற்ற வேண்டும் என்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.

அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்களுக்கான விதிமுறைகள் வகுக்கப்படும் வரை நெடுஞ்சாலைகளிலும், மக்கள் கூடும் இடங்களிலும் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி இல்லை என்ற உயர் நீதிமன்றக் கிளையின் தீர்ப்பை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. அது அரசியல் கட்சிகளை முடக்கி வைக்கும் செயலாகும்.

அரசியக் கட்சிகளின் நிகழ்ச்சிகள் பாதுகாப்பாக நடப்பதை உறுதி செய்யும் வகையில் விதிகள் வகுக்கப் படுவதை பாட்டாளி மக்கள் கட்சி ஆதரிக்கிறது. அதற்காக விதிகள் வகுக்கப்படும் வரை அரசியல் கட்சிகள் அவற்றின் ஜனநாயகக் கடமையை செய்யாமல் முடங்கிக் கிடக்க முடியாது. எந்த ஒரு சூழலையும் சமாளிக்க இடைக்கால ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இன்றைய சூழலை சமாளிக்கவும் இடைக்கால ஏற்பாடு தேவை.

எனவே, பொதுக்கூட்டங்களுக்கான பாதுகாப்பு விதிகள் வகுக்கப்படும் வரை மக்கள் கூடும் இடங்களில் அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், நடைபயணங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை நடத்திக் கொள்ள இடைக்கால அனுமதியை அரசு அளிக்க வேண்டும். அதற்காக அரசின் சார்பில் விதிக்கப்படும் நியாயமான நிபந்தனைகளை அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டும் பொறுப்புடன் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்" எனத் தெரி வித்துள்ளார்.

## “விஜய்யை கைது செய்தால் அது தவறான முன்னுதாரணம் ஆகிவிடும்” - டிடிவி தினகரன்

சென்னை, அக்.06-

“கரூர் சம்பவத்தில் தவெக தலைவர் விஜய்யை கைது செய்தால் தவறான முன்னுதாரணம் ஆகிவிடும். பின்னாளில் இது அனைத்து அரசியல் கட்சிகளையும் பாதிக்கும்” என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போதும், “கரூர் சம்பவத்துக்கு தவெக தலைவர் விஜய் தார்மீக பொறுப்பேற்றிருக்க வேண்டும். தார்மீக பொறுப்பு என்பது குற்றத்தை ஏற்பதாக ஆகாது. விஜய்யை கைதுசெ ய்தால் அது தவறான முன்னுதாரணமாகிவிடும் என்பதால் இந்த விவகாரத்தில் முதல்வர் நிதானமாக செயல்படுகிறார். முதல்வர் ஸ்டாலின் 50 ஆண்டுகாலம் அனுபவமிக்க தலைவர். நான் நியாயமான விஷயத்தைக் கூறினால், முதல்வருக்கு ஆதரவாக செயல்படுவதாக கூறுகிறார்கள்.

அனைத்து கட்சிகளும் பேரணி, பொதுக்கூட்டம், மாநாடு நடத்துகிறோம். நம்மை மீறி தவறு நடப்பது இயல்புதான். அதற்கு அனைத்து, தலைவர்களையும் கைது செய்ய வேண்டிய சூழல் உருவாகும். இது பின்னாளில் திமுகவையும் பாதிக்கும். கரூர் விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலினை உயர்த்திப் பேசவில்லை. உண்மையைப் பேசுகிறேன்.

தவெக தலைவர் விஜய்யை கைது செய்தால் தவறான முன்னுதாரணம் ஆகிவிடும். பின்னாளில் இது அனைத்து அரசியல் கட்சிகளையும் பாதிக்கும். தூத்துக்குடி சம்பவத்தில் 13 பேரை சுட்டுக் கொன்றனர். அப்போது அந்த துறைக்கு தலைவராக இருந்த பழனிசாமி பொறுப்பேற்றாரா?

கரூர் சம்பவத்தை வைத்து தவெகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார் பழனிசாமி. பழனிசாமி தலைமையை ஏற்று எப்படி அவர்கள் இருக்கும் கூட்டணிக்கு நாங்கள் செல்ல முடியும். தவெகவை கூட்டணிக்கு வர வைக்க வேண்டும் என்பதற்காக கரூர் துயரத்திற்கு ஆட்சியாளர்கள்தான் காரணம் என குள்ளநரித்தனமாக குற்றச்சாட்டை முன்வைக்கிறார் எடப்பாடி. நாகரீகம் இல்லாமல் கூட்டணி குறித்து பேசுகிறார். இந்த விவகாரத்தில் நடுநிலையாக இருங்கள்.

2026 தேர்தலில் நான்கு முனை போட்டி நடக்கும். கரூர் சம்பவம் ஒரு விபத்துதான். இதில் யார் மீதும் பழிபோட முடியாது. 2026 தேர்தலில் பழனிசாமியின் துரோகத்தை வீழ்த்துவோம்” என்றார்.

## பாஜகவுடன் விஜய் கட்சி மறைமுகக் கூட்டணியா? - நயினார் நாகேந்திரன் விளக்கம்

சென்னை, அக்.06-

பாஜகவுடன் விஜய் மறைமுக கூட்டணி வைத்திருப்பதாக வெளியாகும் தகவல்கள் அனைத்தும் திமுக செய்யும் சதி என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.



சென்னை கோபாலபுரத்தில் அமைந்துள்ள காதி பவனில் சுதேசி பொருட்களை ஊக்குவிக்கும் வகையில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் காதிப் பொருட்களை வாங்கினார். இதையடுத்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

மணிப்பூர், குஜராத், கும்பமேளாவுக்கு அனுப்பாத மத்திய குழுவை தமிழகத்துக்கு மட்டும் பாஜக அரசு அனுப்புகிறது என முதல்வர் கேள்வி எழுப்பியிருக்கிறார். கரூருக்கு விஜய் வரும்போது ஏன் மின்சாரம் தடைபட்டது, தவெகவினர் கேட்ட இடத்தில் ஏன் அனுமதி வழங்க வில்லை, ஒரு அரசியல் கட்சி தலைவர் வரும்போது மின் விளக்குகளை அனைப்பதும், தடியடி நடத்துவதும், செருப்பை வீசுவதையும் முதல்வர் அனுமதிக்கிறாரா, சம்பவம் நடந்த அரை மணி நேரத்தில் முதல்வரால் எப்படி அங்கு புறப்பட்டு வர முடிந்தது?

இரவோடு இரவாக 40 உடல்களுக்கு பிரேத பரிசோதனை செய்தது எப்படி, இந்த கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா ஸ்டாலின். மற்ற மாநிலங்களில் உயிரிழப்பு நடந்திருக்கிறது. அங்கெல்லாம் செல்லாமல், இங்கு மட்டும் குழு வருகிறது என பேசும் முதல்வர் ஸ்டாலின், 41 உயிரிழப்புகளும் சரியானது என்கிறாரா, முதல்வர் இந்த உயிரிழப்புகளை ஒப்பிட்டு பேசுவது ஆச்சரியமாகவும், பரிதாபமாகவும் இருக்கிறது.

தவறு செய்தவர்களை காப்பாற்றுவதற்கு நாங்கள் ஒன்றும் நீதிமன்றம் கிடையாது. அரசியல் கட்சி வைத்திருக்கிறோம் அவ்வளவுதான். நீதிமன்றம் சில நேர்மையான தீர்ப்புகளையும் வழங்க வேண்டும். பாஜகவுடன் விஜய் மறைமுக கூட்டணி வைத்திருப்பதாக வெளியாகும் தகவல்கள் அனைத்தும் திமுக செய்யும் சதி. ஏனென்றால் திமுக இன்று மக்களின் வெகுஜன விரோதியாக மாறியிருக்கிறது. மக்களின் நன்மதிப்பை பெரிதும் இழந்துள்ளது.

இந்த நேரத்தில் திமுக ஒரு இடத்திலாவது டெபாசிட் வாங்குவார்களா என்பது தெரியவில்லை. 2011ல் மிகப்பெரிய கூட்டணியை கருணாநிதி வைத்திருந்தார். ஆனால், அன்று ஜெயலலிதா தான் வெற்றிப் பெற்றார். கூட்டணி பலத்துடன் இருக்கிறோம் என்ற மாயையை திமுக உருவாக்கி வைத்துள்ளது. அந்த மாயை 2026ல் மக்கள் முறியடிப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

சுற்றுப்பயணம்: சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இந்த பயணத்தை வரும் 2ம் தேதி மதுரையில் தொடங்குகிறார். தொடக்க நிகழ்வில் பாஜக தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா பங்கேற்கிறார்.



## கோல்ட்ரிப் இருமல் மருந்தை குழந்தைகளுக்கு அளிக்க வேண்டாம்: அமைச்சர் ம.சுப்பிரமணியன் அறிவுறுத்தல்

சென்னை, அக்.06-

கோல்ட்ரிப் இருமல் மருந்தை குழந்தைகளுக்கு அளிக்க வேண்டாம் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தியுள்ளார்.

குரோம்பேட்டை ஹோலி ஏஞ்சல்ஸ் மேல்நிலைப் பள்ளியில் நலன் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம் நேற்று நடைபெற்றது. அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், முகாமில் அமைக்கப்பட்டிருந்த மருத்துவ அரங்குகளை பார்வையிட்டு பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இதில் ஆட்சியர் சினேகா, பல்லாவரம் எம்எல்ஏ இ.கருணாநிதி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் சோமசுந்தரம், துணை இயக்குநர் பானுமதி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் பங்கேற்றனர்.

முகாமில் ரத்த பரிசோதனை, காசநோய், புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு விதமான மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டன. மேலும் முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல், மகப்பேறு, குழந்தைகள், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண், காது மூக்கு தொண்டை, மனநலம், பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. மேலும் முதல்வரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நேற்றைய முகாமில் 1,000 க்கும் மேற்பட்ட வர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

அதன் பின்னர் அமைச்சர் மா சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் சாலை விபத்துகளில் சிக்கி சிகிச்சை பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 4 லட்சத்தை கடந்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தயாரான இருமல் மருந்தை சாப்பிட்ட குழந்தைகள் வடமாநிலத்தில் உயிரிழந்துள்ளது தொடர்பாக குறித்து டிரக் கண்ட்ரோல் அலுவலரிடம் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அவர் தற்போது விசாரணை செய்து வருகிறார். விசாரணை முடிந்த பின்னர் இது குறித்த விரிவான தகவல் தெரிவிக்கப்படும்.

தமிழ்நாட்டில் அந்த வகை இருமல் மருந்து விற்பனையாகி வருகிறதா என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருகிறோம். காலாவ தியான மருந்தை உட்கொண்டதால் குழந்தைகள் உயிரிழந்திருக்கலாம் என்கிற ரீதியிலும் விசா ரணை நடைபெற்று வருகிறது. கோல்ட்ரிப் இருமல் மருந்தை குழந்தைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. என்றார்.



## கரூர்: விஜய்யின் பிரச்சார வாகனம், ஓட்டுநர் மீது வழக்குப் பதிவு

கரூர், அக்.06-

கரூர் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் விஜய் வாகனம் மற்றும் ஓட்டுநர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 27ம் தேதி கரூர் வேலுசாமிபுரத்தில் தவெக தலைவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்காக நாமக்கல்லில் இருந்து கரூர் வரும் வழியில் கரூர் மாவட்ட எல்லையான தளவாபாளையம் பகுதியில் விஜய்க்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்பொழுது அஜாக்கிரதையாக இருவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று கீழே விழுந்தனர். லேசான காயத்துடன் உயிர் தப்பினர்.

இதையடுத்து கரூர் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் விஜய் வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் வாகனம் மீதும், இருசக்கர வாகனங்கள் ஓட்டிச் சென்ற இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## வாழ்வாதாரத்தை உறுதி செய்ய முடியாததால் 1,968 விவசாயிகள் தற்கொலை: அன்புமணி விமர்சனம்



சென்னை, அக்.06-

‘திமுக ஆட்சிக்கு வந்த 3 ஆண்டுகளில் 1,968 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்’ என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை: நாடு முழுவதும் 2023ம் ஆண்டுக்கான தற்கொலைகள் மற்றும் விபத்து உயிரிழப்புகள் குறித்த புள்ளிவிவரங்களை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ளது. இதில், தமிழகத்தில் மொத்தம் 19,483 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 22,686 பேர் தற்கொலை செய்துகொண்ட மராட்டியத்துக்கு அடுத்தபடியாக அதிக தற்கொலைகள் நிகழும் மாநிலம் தமிழகம்தான்.

விவசாயிகள் வாழ வழியற்ற மாநிலமாக தமிழகம் திகழ்வதையே இது காட்டுகிறது. இதற்கு முன் 2022ம் ஆண்டில் 738 விவசாயிகளும், 2021ம் ஆண்டில் 599 விவசாயிகளும் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர். திமுக ஆட்சிக்கு வந்த 3 ஆண்டுகளில் 1,968 விவசாயிகள் தற்கொலை செயது கொண்டுள்ளனர்.

விவசாயிகளின் தற்கொலைகளுக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றில் முதன்மையானது விவசாயிகளால் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய முடியாததுதான். அதுகுறித்த எந்தக் கவலையும் இல்லாத திமுக அரசுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பேரவைக் கூட்ட நாட்களை முடிவு செய்ய அலுவல் ஆய்வுக்குழு அக்.13-ம் தேதி கூடுகிறது

சென்னை, அக்.06-

தமிழக சட்டப்பேரவை கூட்டம் வரும் அக்.14ம் தேதி தொடங்க உள்ள நிலையில், பேரவையை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்த அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் அக்.13ம் தேதி நடைபெறுகிறது.





தமிழக சட்டப்பேரவையின் இந்தாண்டுக்கான முதல் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 6ம் தேதி தொடங்கியது. ஆளுநர் உரை மீதான விவாதம் 4 நாட்கள் நடைபெற்றன.

அதன்பின், மார்ச் 14ம் தேதி தமிழக அரசின் 2025 26ம் நிதியாண்டுக்கான பட்ஜெட், 15ம் தேதி வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இரு பட்ஜெட்கள் மீதான விவாதம் மார்ச் 17ம் தேதி முதல் 21ம் தேதி வரை நடைபெற்றது. தொடர்ந்து கடந்த மார்ச் 24ம் தேதி துறைதோறும் மானிய கோரிக்கை விவாதம் தொடங்கி ஏப் .29ம் தேதி வரை நடைபெற்றது. இதையடுத்து, ஏப்.29 ம் தேதி பேரவை மீண்டும் கூடும் தேதி குறிப்பிடப்படாமல் தள்ளிவைக்கப்பட்டது.

சட்டப்பேரவை விதிகளின்படி, ஒரு பேரவைக் கூட்டம் முடிவுற்றால் அடுத்த கூட்டம் 6 மாதங்களில் நடைபெற வேண்டும். அதன் அடிப்படையில், வரும் அக்.14ம் தேதி சட்டப்பேரவைக் கூட்டம் நடைபெறும் என பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவித்திருந்தார். அன்றைய நாள் முன்னாள் உறுப்பினர்கள் மறைவுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்படுகிறது. அதன்படி, சமீபத்தில் மறைந்த வால்பாறை எம்எல்ஏ அமுல் கந்தசாமி மற்றும் பிரபலங்கள் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பேரவை தள்ளிவைக்கப்படும். மேலும், கூடுதல் செலவினங்களுக்கான துணை மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்படும் என்று பேரவைத் தலைவர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த கூட்டத் தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது தொடர்பான அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் வரும் அக்.13ம் தேதி பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது. இக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின்படி, பேரவை நிகழ்வுகள் நடைபெறும்.

## காவல் துறை அனுமதி மறுத்ததால் பழனிசாமியின் பிரச்சார பயணம் 3வது முறையாக மாற்றம்

நாமக்கல், அக்.06-

நாமக்கல் மாவட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியின் பிரச்சாரப் பயணம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



கடந்த 19, 20, 21ம் தேதிகளில் நாமக்கல் மாவட்டத்தில் பழனிசாமி சுற்றுப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டு, கடந்த 19ம் தேதி ராசிபுரம், சேந்தமங்கலம் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார். கனமழை அறிவிப்பு காரணமாக செப். 20, 21ம் தேதிகளில் நடைபெறவிருந்த பிரச்சாரப் பயணம் அக்.4, 5ம் தேதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டது. பின்னர், அக். 5, 6ம் தேதிகளுக்கு மீண்டும் மாற்றம் செய்து அதிமுக தலைமை அறிவித்தது.

அதன்படி இன்று திருச்செங்கோடு, குமாரபாளையம் தொகுதியிலும், நாளை நாமக்கல், பரமத்தி வேலூர் தொகுதியிலும் பிரச்சாரம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால், பிரச்சாரத்துக்கு தேர்வு செய்யப்பட்ட 4 இடங்களும் மாநில நெடுஞ்சாலைக்கு உட்பட்ட இடங்கள் என்பதால், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவைக் காரணம் காட்டி பிரச்சாரத்துக்கு காவல் துறை அனுமதி மறுத்துள்ளது. இதனால், பிரச்சார தேதி 3வது முறையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வரும் 8ம் தேதி திருச்செங்கோடு, குமாரபாளையத்திலும், 9ம் தேதி நாமக்கல், பரமத்தி வேலூரிலும் பழனிசாமி பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன கடலோர காவல் படை ரோந்து கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிப்பு

காரைக்கால், அக்.06-

இந்திய கடலோர காவல் படைக்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ரோந்துக் கப்பல், காரைக்காலில் நேற்று நடைபெற்ற விழாவில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

இந்திய கடலோர காவல் படையின் காரைக்கால் மையம் நிரவி பகுதியில் செயல்பட்டு வருகிறது. காரைக்கால் மாவட்டம் வாஞ்சூரில்

உள்ள அதானி கப்பல் துறைமுகத்தில் உள்ள தளத்தில் இருந்து கடலோர காவல் படைக்குச் சொந்தமான ரோந்துக் கப்பல்கள், படகுகள் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில், இந்த மையத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில், கோவா கப்பல் கட்டும் தளத்தில் புதிதாக தயாரிக்கப்பட்ட ‘அக்ஷர்’ என்று பெயரிடப்பட்ட அதிநவீன ரோந்துக் கப்பலை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழா காரைக்கால் துறைமுக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

மத்திய பாதுகாப்புத் துறை கூடுதல் செயலர் தீப்தி மொஹில் சாவ்லா சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு, கப்பலை





இயக்கி

வைத்துப் பேசியதாவது: இந்திய கடலோர காவல் படையின் மேம்பாட்டுக்கு அக்ஷர் ரோந்துக் கப்பல் பெரிதும் உதவும். 60 சதவீதம் உள்நாட்டுப் பொருட்கள், தளவாடங்களை பயன்படுத்தி இது தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டில் 11 ஆயிரம் கி.மீ. கடலோர பாதுகாப்பில், கடலோர காவல் படையின் பங்களிப்பு அளப்பரியது. குறிப்பாக, மீனவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல், கடல்வழி கடத்தலை தடுத்தல், ஊடுருவலை தடுத்தல், கடல் பகுதி சூழல் பாதுகாப்பு, மீட்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றில் கடலோர காவல் படையின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியவை.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில், கடலோர காவல் படை கூடுதல் இயக்குநர் ஜெனரல் கமாண்டர் டோனி மைக்கேல், காரைக்கால் மைய கமாண்டன்ட் சவுமய் சந்தோலா, புதிய ரோந்துக் கப்பல் கமாண்டன்ட் சுபேந்து சக்கரபோர்தி, காரைக்கால் ஆட்சியர் ரவி பிரகாஷ், மாவட்ட எஸ்.எஸ்.பி. லட்சுமி சவுஜன்யா, நாகை எஸ்.பி. செல்வகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கப்பலில் உள்ள சிறப்பம்சங்கள்: இந்த ரோந்துக் கப்பல் 320 டன் எடை, 51 மீட்டர் நீளம் கொண்டது. மணிக்கு 27 நாட்டிக்கல் மைல் வேகத்தில் இயங்கும். 30 எம்எம் சிஆர்என் 91 துப்பாக்கிகள், ரிமோட் மூலம் இயக்கப்படக்கூடிய இயந்திர துப்பாக்கிகள், தானியங்கி மின் சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000